6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ். ஆஸ்டின், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், எப்போது உங்களுடைய கருத்தைச் சொல்லவேண்டும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தவுடனேயே நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். இப்போது நான் அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தையே பேரவையின் முடிவிற்கு விட்டுவிட்டேன். இப்போது நீங்கள் எழுந்து “நான்

அதை எதிர்க்கிறேன்'' என்றால் எப்படி? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். ஆனால், நடைமுறை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் கடைபிடியுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலே எதிர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(ஆ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

* * *

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ள மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய மரியாதையையும், காலை வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.